www.Padasalai.Net www.TrbTnpsc.com

RTVM

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

11 - ஆம் வகுப்பு — பொருளியல் — காலம் : 3.00 மணி — மதிப்பெண்கள் : 90

## பகுதி - 1

குறிப்பு:- i. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

ii. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்

2. மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக் கோட்டின் வடிவமானது
அ) படுகிடை ஆ) செங்குத்து இ) விரைந்து சரியும் ஈ) மெதுவாக சரியும்

3. நுகர்வோர் சமநிலையில் இருக்கும் போது இறுதிநிலை பயன்பாடானது ........ இருக்கும்
அ) குறைவாக ஆ) எதிர்மறை இ) சமமாக ஈ) கூடுதலாக

4. ............ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்?
அ) பண்டங்கள் ஆ) சேவைகள் இ) அங்காடிகள் ஈ) வருவாய்

5. பயன்பாடு என்பது
அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
இ) பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

6. செலவு என்பது ............ அ) விலை ஆ) மதிப்பு இ) மாறாச் செலவு ஈ) உற்பத்தி

7. நீண்ட கால சராசரி செலவுக் கோடு ........ கோடு என அழைக்கப்படுகிறது
அ) தேவைக் ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை

8. முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில் ........... பெறும்.
அ) இயல்பு இலாபம் ஆ) நஷ்டம் இ) அதிக இலாபம் ஈ) அதிக நஷ்டம்

9. விற்பனைச் செலவிற்கு உதாரணம்?
அ) போக்குவரத்துச் செலவு ஆ) விளம்பர செலவு
இ) கச்சா பண்டங்களின் விலை பெறும். ஈ) கொள்முதல் செலவு

10. தொன்மைக் கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?
அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) மார்ஷல் ஈ) வாக்கர்

11. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர்?
அ) ஹாலே ஆ) சும்பீட்டர் இ) கீன்ஸ் ஈ) நைட்

12. மக்கள் தொகை அடர்த்தி என்பது-
அ) நிலத்தின் அளவு/மக்கள் தொகை ஆ) நிலத்தின் அளவு/ வேலைவாய்ப்பு
இ) மக்கள் தொகை/குறிப்பிட்ட நிலஅளவு ஈ) மக்கள்தொகை/வேலைவாய்ப்பு

13. இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு?
அ) 1456 ஆ) 1991 இ) 1948 ஈ) 2000

14. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்?
அ) 1992-1997 ஆ) 2002-2007 இ) 2007-2012 ஈ) 1997-2002

15. GST யில் அதிக அளவு வரிவிதிப்பு ........... ஆகும் ( ஜூலை 1. 2017 நாளின்படி)
அ) 18% ஆ) 24% இ) 28% ஈ) 32%

16. GST வரி சட்டம் ......... அமல்படுத்தப்பட்டது?
அ) 2017 ஜூலை 1 ஆம் நாள் ஆ) 2016 ஜூலை 1 ஆம் நாள்
இ) 2017 ஜனவரி 1 ஆம் நாள் ஈ) 2016 ஜனவரி 1 ஆம் நாள்

17. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு
அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல் ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
இ) குறைந்த அளவு மக்கள் தொகை ஈ) ஏற்றத்தாழ்வுக் குறைவு

18. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம் என்ன?
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 3



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

19. தொகையீடு என்பது என்பதின் தலைகீழ் செயல்பாடாகும்
அ) வேறுபாடு ஆ) கலவை இ) கலந்த கலவை ஈ) வகையீடு
20. Data processing ................ ல் மேற்கொள்ளப்படுகிறது அ) PC யில் மட்டும்
ஆ) கணக்கீடு கருவியில் மட்டும் இ) PC மற்றும் கணக்கீடு கருவி ஈ) விரலி pen drive

## பகுதி - II

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- 7 × 2 = 14

21. நுண்ணியல் பொருளியல் என்றால் என்ன?
22. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக
23. உழைப்பு வரையறு.
24. மாறாச் செலவு என்றால் என்ன?
25. விலை ஏற்பவர் யார்?
26. பணக்கூலியையும் உண்மைக் கூலியையும் வேறுபடுத்துக.
27. இயற்கை வளங்களைப் பற்றி குறிப்பு வரைக.
28. முதலீட்டைத் திரும்பப் பெறுதல் வரையறு
29. 62=34+4X என்றால் X - இன் மதிப்பு காண்க?
30. குறுங்கடன் (micro finance) என்றால் என்ன?

## பகுதி - III

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 × 3 = 21
வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்:-

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.
34. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. வாரம், போலி வாரம்: வேறுபடுத்துக.
36. சமூகக்கட்டமைப்புகளை விளக்குக
37. வேளாண் உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை கூறுக.
38. ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூறுக.
39. MS EXCEL Sheet செயல்படுத்துதில் உள்ள நிலைகளை விளக்குக.
40. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
*(அல்லது)* ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?
42. அ) குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.
*(அல்லது)* ஆ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.
43. அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. *(அல்லது)*
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.
44. அ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி? *(அல்லது)*
ஆ) மொத்தச் செலவு =10+Q3, Q=5 எனில் AC,AVC,TFC,AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.
45. அ) முற்றுரிமையில் விலையும் உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக. *(அல்லது)*
ஆ) முற்றுரிமைபோட்டியில் விலையும் உற்பத்தி அளவும் தீர்மானிக்கப்படுதை வரைபடத்துடன் விளக்குக.
46. அ) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. *(அல்லது)*.
ஆ) தொழிற்கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் விளக்குக.
47. அ) 2015-2020 ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகள் விளக்குக. *(அல்லது)* ஆ) ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com